IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

Crl.M.P. NO.: 2758/2022

DEPOSITION OF WITNESS P.W. 3

| | | |
|---|---|---|
| NAME | : | CHELLADURAI |
| FATHER'S NAME | : | SUNDARESAN |
| VILLAGE | : | MEL MAYIL |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 27th day of February 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை:**

நான் மேல்மாயில் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரான பூங்கோதை எனது அம்மா. கடந்த 26.10.2017 அன்று இரவு 08.00 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்து அருகில் உள்ள எனது அம்மாவின் வீட்டிற்கு பால் கொண்டு செல்வதற்காக வெளியில் வந்தபோது உதவி ஆய்வாளர் காசி மற்றும் காவலர் பாலாஜி இருவரும் அங்கு வந்து என்னை இருவரும் அடித்தார்கள். ஏற்கனவே எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் மீது அளித்திருந்த புகாரில் சரியாக விசாரணை செய்யாமல் அவர்கள் எங்கள் மீது அளித்த புகாரில் அவர்களுக்கு சாதகமாக என் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். பின்னிட்டு நாங்கள் மனித உரிமை ஆணையத்தில் இது தொடர்பாக புகார் அளித்தேன்.

ஒம்,/- ஜோ. ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.